


# 12.06.2026 செய்திகள்

## தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி

- ஒரு வழக்கில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட நாளில் இருந்து மூன்று மாதங்களுக்குள் உயர் நீதிமன்றங்கள் தீர்ப்பை அறிவிக்க வேண்டும் எனவும், தீர்ப்பு குறித்த விவரங்களை 24 மணி நேரத்துக்குள் இணையத்தில் பதிவேற்றியிருக்க வேண்டும் எனவும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.
- 2014 இல் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மூவருக்கு ஆயுள் தண்டனை விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- மேலும் ஒருவருக்கு 2018இல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் நால்வரும் 10 ஆண்டுகளுக்கு மேலாக விசாரணைக் காவலிலேயே (விசாரணைக்கான காத்திருப்பு உள்பட) கழித்துவிட்டதாக ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.
- விசாரணை முடிந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு 2022 இல் ஒத்திவைக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளைக் கடந்தும் தீர்ப்பு வழங்கப்படாத நிலையில் நால்வரும் உச்சநீதிமன்றத்தை அணுகினர்.
- அதன் மீதான தீர்ப்பில்தான், தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட வழக்குகளில் மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அறிவிக்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- விசாரணை, பிணை, தீர்ப்பு போன்றவற்றுக்காக ஒருவர் ஆண்டுக்கணக்கில் காத்திருப்பது நீதி அமைப்புகளின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்திவிடும்.
- கீழமை நீதிமன்றங்கள் தொடங்கி உச்சநீதிமன்றம் வரை போதுமான நீதிபதிகள், வழக்கறிஞர்கள், உதவியாளர்கள் போன்றோர் இல்லாத நிலையில், பல வழக்குகள் விசாரணைக்கு வரவே மனுதாரர்களும் பிரதிவாதிகளும் காத்திருக்க நேரிடுகிறது.
- குறிப்பாக பிணை, முன்பிணை, விசாரணைக் காவலில் இருப்பவரை விடுவிப்பது போன்றவற்றில்கூட ஒருவரைக் காத்திருக்க வைப்பது தவறு எனச் சுட்டிக்காட்டியிருக்கும் உச்சநீதிமன்றம், இதுபோன்ற வழக்குகளில் விசாரணை முடிந்த ஒரே நாளில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது.
- விசாரணையின் ஒவ்வொரு கட்டமும் தொடர்ச்சியாக நீதிமன்றத்தால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதில் ஏற்படுகிற தாமதம் ஒருவரது அடிப்படை உரிமையான தனியுரிமையை நேரடியாகப் பாதிக்கிறது.
- நீதிமன்ற விசாரணைக்கும் தீர்ப்பு வழங்கப்படுதவதற்கும் இடையே உள்ள இடைவெளி, தீர்ப்பில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்பதையும் தலைமை நீதிபதி சூர்யகாந்த் பதிவுசெய்துள்ளார்.
- டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு 2026இல் வழங்கப்பட்ட தாமதத் தீர்ப்பு, 2016 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அப்பாவு வெற்றி பெற்றதாக 10 ஆண்டுகள் கழித்து வெளியான தீர்ப்பு, தன் மீது அவதூறு பரப்பியதாக சன்டிவி மீது நடிகை சுகன்யா தொடர்ந்த வழக்கில் 30 ஆண்டுகள் கழித்து தற்போது வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு போன்றவை உச்சநீதிமன்றத்தின் கருத்துக்கு வலுசேர்க்கும் சில சான்றுகள்.
- இவை பிரபலமானவர்களின் வழக்குகள் என்பதால் மக்களின் கவனத்துக்கு வந்தன. ஆனால், இதுபோல ஏராளமான வழக்குகள் விசாரணை முடிந்தும் தீர்ப்பு அறிவிக்கப்படாமலும் இருப்பதும், விசாரணையும் தீர்ப்பும் இழுத்தடிக்கப்படுவதும் நீதியின் மீதான மக்களின் நம்பிக்கையை நீர்த்துப்போக வைத்துவிடும்.
- பாதிக்கப்பட்டவர்களின் கடைசிப் புகலிடமாக நீதிமன்றங்கள் இருக்கிற நிலையில் கட்டமைப்புக் குறைபாடு, ஊழியர் பற்றாக்குறை போன்ற காரணங்களை முன்னிறுத்தி நீதி வழங்குதலில் தாமதம் ஏற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

SURESH'

- தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்பதை நீதி வழங்கும் அமைப்புகளில் இருக்கிற ஒவ்வொருவரும் உணர்ந்து, தங்கள் கடமையைச் செவ்வனே செய்வதும் அதற்கான அடிப்படைக் கட்டமைப்பை அரசுகள் உருவாக்கித் தருவதுமே மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு அரணாக அமையும்!

## நிம்மதியான மரணம் நம் உரிமை!

- நமது உயிரியல் வாழ்க்கையில் சில ஆண்டுகளை அதிகரிப்பதில் அறிவியல் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் ஆரோக்கியமான வாழ்க்கையையும், அதைவிட முக்கியமாக, மரணத்தின்போது ஓர் அமைதியான முடிவையும் உறுதி செய்ய அது முற்றிலும் தவறவிட்டது.
- எந்த விலை கொடுத்தாவது மரணத்தைத் தள்ளிப்போட வேண்டும் என்கிற மருத்துவமனைகளின் பிடிவாதத்தால், மனித வாழ்க்கையின் இறுதிப் பக்கத்தை ஒரு புனிதமான விடைபெறுதலாகப் பார்க்காமல், இயந்திரத்தனமான ஒரு கொடூரம ான நரகமாக நாம் மாற்றிவிட்டோம்.

» தீவிர சிகிச்சைப் பிரிவின் கொடுமை

- இன்றைய நவீன மருத்துவமனையின் தீவிரச் சிகிச்சைப் பிரிவில் (ICU) வெவ்வேறு சமூகப் பின்னணியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு தங்களின் இறுதி நாள்களைக் கழிக்கிறார்கள் என்பதை நாம் உற்றுநோக்க வேண்டும்.
- ஏழைகளுக்கு, மரணம் என்பது அவர்கள் குடும்பத்தின் பொருளாதாரத்தையும் உணர்ச்சிகளையும் ஒரே நேரத்தில் சிதைக்கும் ஒரு பேரதிர்ச்சி. வாழ்நாள் முழுவதும் முறையான மருத்துவ வசதி கிடைக்காமல், தீராத நோய்களுடன் இறுதி க்கட்டத்தில் மருத்துவமனைக்குள் நுழைகிறார்கள்.
- ஆபத்தான சூழல் ஏற்படும்போது, அரசு அல்லது குறைந்த கட்டண மருத்துவமனைகளின் இயந்திரத்தனமான தீவிர சிகிச்சைப் பிரிவுக்குள் தள்ளப்படுகிறார்கள்.
- அங்கே, அவர்களின் உடலை எப்படியாவது இயங்க வைக்க வேண்டும் என்கிற ஆக்ரோஷமான முயற்சிகள் நடக்கின்றன. குழாய்கள் செருகப்படுகின்றன, இதயம் நின்ற பிறகும் நெஞ்சைப் பலவந்தமாக அழுத்திப் பிழைக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன.
- சிகிச்சைக்காக வாங்கிய கடனை நினைத்துக் கதறும் குடும்பத்தாரைப் பிரித்து ஒளிரும் விளக்குகளுக்குக் கீழே அந்த ஏழைகள் அநாதையாக இறக்கிறார்கள்.
- நடுத்தர வர்க்கத்தினரின் நிலையோ இன்னும் பரிதாபகரமானது. அவர்களின் இறுதி நாள்கள் தங்களின் வாழ்நாள் சேமிப்பு மொத்தத்தையும் மெல்லமெல்லக் கரைக்கும் ஓர் உறிஞ்சியாக மாறிவிடுகிறது.
- தங்களின் பிள்ளைகளுக்காகவும் பேரப்பிள்ளைகளுக்காகவும் சேர்த்துவைத்த உழைப்பின் பணம், ஒரு தனியார் மருத்துவமனையின் ஐசியூ படுக்கையில் சில வாரங்களிலேயே ஆவியாகிவிடுகிறது.
- நடுத்தரக் குடும்பங்கள் ஒருவித உணர்ச்சிபூர்வமான மிரட்டலுக்கு ஆளாகிறார்கள் : உங்கள் பெற்றோர் மீது உங்களுக்கு அன்பு இல்லையா? ஏன் சிகிச்சையைத் தொடர மறுக்கிறீர்கள்? என்கிற கேள்வியின் முன் அவர்கள் குற்ற உணர்ச்சியால் சரணடைகிறார்கள்.

» பணக்காரர்களின் செல்வாக்கு

- வசதிவாய்ப்பு உள்ளவர்கள்கூட இந்த அவலமான முடிவிலிருந்து தப்பிக்க முடிவதில்லை. சொல்லப்போனால், அவர்களின் பணமே அவர்களுக்கு ஒரு தனித்துவமான சித்திரவதையாக மாறுகிறது.
- அவர்களிடம் வசதியும் தொடர்புகளும் இருப்பதால், உலகத் தரம்வாய்ந்த நிபுணர்கள் அவர்களின் சிகிச்சைக்காக வரவழைக்கப்படுகிறார்கள். எந்த ஒரு மருத்துவரும் ஒரு முக்கிய பிரமுகரை (விஐபி) காப்பாற்றத் தவறிவிட்டார் என்கிற பழியைச் சுமக்க விரும்புவதில்லை.
- இதன் விளைவாக, பணக்காரர்கள் மிகக் கொடூரமான ஊடுருவக்கூடிய சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அவர்களின் ஆன்மா உடலைவிட்டுப் பிரியத் துடித்தாலும், இயந்திரங்களின் துணையோடு ஓர் உயர்-தொழில்நுட்ப நரகத்தில் பல வாரங்கள் அவர்கள் உயிருடன் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.
- இறுதியில், இந்த மூன்று வெவ்வேறான பாதைகளும் ஒரே இருண்ட புள்ளியில்தான் முடிவடைகின்றன.

» <u>வரலாற்று தீர்ப்பு</u>

- இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 21 வழங்கும் 'வாழும் உரிமை' (Right to Life) என்பதில் 'கண்ணியத்துடன் இறக்கும் உரிமையும்' (Right to die with dignity) அடங்கும் என 2018 இல் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.
- இந்த வேதனையான மருத்துவச் சுழற்சியை உடைக்க வேண்டுமானால், நமது உடலின் மீதும், நமது இறுதிப் பயணத்தின் மீதும் நமக்கு இருக்கும் உரிமையை நாம் மீளப்பெற வேண்டும்.
- அதற்கு நமக்குக் கிடைத்துள்ள மிகச் சிறந்த சட்டபூர்வமான ஆயுதம்தான் 'வாழும் விருப்பாவணம்' (Living Will) அல்லது முன்கூட்டிய மருத்துவ உத்தரவு (Advance Medical Directive) ஆகும்.
- இந்தியாவில் இந்த வாழும் விருப்பாவணத்துக்கான சட்டப்பூர்வ அங்கீகாரத்தை 'காமன் காஸ்' (Common Cause V.Union of India) தொடுத்த வழக்கின் மூலம் இந்திய உச்சநீதிமன்றம் உறுதி செய்தது.
- 2018இல் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பில், ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு அமர்வு, ஒரு மனிதர் குணப்படுத்த முடியாத நிலையில் இருக்கும்போது அவரது விருப்பத்துக்கு மாறாகச் செயற்கைக் கருவிகள் மூலம் உயிரை நீட்டிப்பது, அவரது கண்ணியத்துக்கு எதிரானது என்று தெளிவுபடுத்தியது. மேலும், 2023இல் இந்த நடைமுறையை மேலும் எளிமையாக்கி உச்சநீதிமன்றம் சில முக்கிய வழிகாட்டுதல்களை வழங்கியது.

» <u>முக்கிய அம்சங்கள்</u>

- உங்கள் உடல் மீதான முடிவை, சுயநினைவு இருக்கும்போதே நீங்களே தீர்மானிக்கலாம். மருத்துவர்கள், அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியின் முன்னிலையில் இதைச் சட்டபூர்வமாக்கலாம்.
- ஒரு மனிதர் முழு சுயநினைவோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கும்போதே எழுதப்படும் சட்டப்பூர்வ ஆவணம்தான் இந்த வாழும் விருப்பாவணம்.
- தனக்கு ஏதேனும் குணப்படுத்த முடியாத நோயோ, மீள முடியாத விபத்தோ ஏற்பட்டு, பேச முடியாத நிலைக்குச் சென்றால், தன் உடலுக்கு என்னென்ன மருத்துவ சிகிச்சைகளைச் செய்ய வேண்டும், எவற்றையெல்லாம் செய்யக்கூடாது என்று ஒருவர் உரக்கச் சொல்ல முடியும்.
- 'என் மூளை செயல்படுவதை நிறுத்தும்போது அல்லது என் நோய் குணப்படுத்த முடியாத நிலையை எட்டும்போது, என்னை இயந்திரங்களோடு பிணைக்காதீர்கள். என்னை அமைதியாகப் போக விடுங்கள்' என்று குரல் கொடுக்க முடியும்.
- இந்த ஆவணம் பரவலாக நடைமுறைக்கு வரும்போது, மருத்துவ உலகம் ஒரு மனிதரைப் பலவந்தமாக உயிருடன் வைப்பதற்குப் பதிலாக, அவரின் இறுதி நாள்களை வலியற்றதாக மாற்றும் 'பாலியேட்டிவ் கேர்' (Polliative Care) எனப்படும் தற்காலிக வலி குறைப்பு மருத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும்.
- இனிமேலும் ஒரு வணிகமயமாக்கப்பட்ட மருத்துவக் கட்டமைப்பு நமது இறுதிப் பயணத்தைத் தீர்மானிக்க நாம் அனுமதிக்கக்கூடாது.
- முதுமையோ, நோயோ நம் கதவைத் தட்டும்வரை காத்திருக்காமல், மரணத்தைப் பற்றிய உரையாடல்கள் நம் உணவருந்தும் மேசைகளிலேயே நாம் சாதாரணமாக்க வேண்டும்.
- உச்சநீதிமன்றம் நமக்கு வழங்கியுள்ள இந்தச் சட்டப்பூர்வமான உரிமையைப் பயன்படுத்தி நமது இறுதி நாள்களை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.
- நமக்கு நீண்ட ஆயுளைத் தந்து, அறிவியல் தன் கடமையைச் செய்துவிட்டது. இப்போது, அந்த வாழ்க்கை அமைதியாகவும், இயந்திரங்களின் சத்தத்துக்கு நடுவில் இல்லாமல் அன்பானவர்களின் அரவணைப்போடும் முடிவதை உறுதி செய்ய வேண்டியது மனிதர்களாகிய நம் கடமை.
- ஒவ்வொரு வீட்டிலும் வாழும் விருப்பாவணம் (Living Will) பற்றிய விழிப்புணர்வும் அதன் பயன்பாடும் அதிகரிக்க வேண்டும்.
- உண்மையான மருத்துவ முன்னேற்றம் என்பது ஒரு மனிதரை எவ்வளவு காலம் படுக்கையில் போட்டு இழுக்கிறோம் என்பதில் இல்லை; மாறாக, ஒரு மனித ஆன்மாவை எவ்வளவு கண்ணியமாகவும், வலியின்றியும், அமைதியாகவும் இந்த உலகிலிருந்து விடைபெற அனுமதிக்கிறோம் என்பதில்தான் உள்ளது.

SURESH'